ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

*சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த*

# ॥ ஸ்ரீ வைணவதினசரி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ ஸ்ரீ வைணவதினசரி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡வரி இருள் அழி வழி⋆ மனம் வரும் உணர்வொடு⋆
கரிகிரி மருவிய⋆ கரியவன் அடியிணை⋆
பரிவொடு பரவு நல்⋆ அடியவர் பழ உரை⋆
அரி அரி அரி அரி⋆ அரி அரி அரியே (1)

வினைவகை ஒழுகிய⋆ வெறி நிலை அடையவும்⋆
நினைவுடை நிகழ்வெதிர்⋆ நிலை நலம் அணுகிட⋆
மனம் உரை கிரிசைகள்⋆ மகிழ்மறை நெறி கொடு⋆
தனி முதல் அடியிணை⋆ அடைபவர் தமரே (2)

மலர் மகள் மருவிய⋆ மறு உடை இறையவன்⋆
மலர் அடி கருதிய⋆ மனமுடை அடியவர்⋆
மலர் புனல் அமுதுடன்⋆ வகையன அடையவும்⋆
மலர் மதி எமதல⋆ என அறிபவரே (3)

நறை உடை மலர் மகள்⋆ நலம் உற மருவிய⋆
இறையவன் இனிதுற⋆ இனியவை எணும் அவர்⋆
அறநெறி இலன் எவன்⋆ அணுகிலும் அணுகிலர்⋆
துறை அலதெனும் ஒரு⋆ துறை படுகிலரே (4)

ஒளி மதி என ஒரு⋆ திருவுடன் உயர்பவன்⋆
நளி மதி முக நகை⋆ நல நில உகவுகள்⋆
தெளி புனல் அமுதன⋆ செழு மதி அடியவர்⋆
குளி முதல் கிரிசைகள்⋆ குறைகிலர் வலவே (5)

www.prapatti.com

வருவதொருறவென⋆ வளர் இளவரசென⋆
மருவுநன் மகன் என⋆ வனமத கரி என⋆
அரு விலை மணி என⋆ அடியவர் அடைபவர்⋆
அருகணை இறைவனை⋆ அரு கணையுடனே (6)

விரை கமழ் மலர் மகள்⋆ மிக உறும் இறையவன்⋆
குரை கழல் குறுகிய⋆ குளிர் மதி மதியொடு⋆
வரை நிலை அடியவர்⋆ மறைகளின் மறை எனும்⋆
உரை நிரை பரவுவர்⋆ உளம் அமுதுணவே (7)

துதிகளும் அறிவரு⋆ சுருதியின் இறுதியின்⋆
இதயம் இதென முனி⋆ இறையவர் உரைகளும்⋆
மதுர மன் உதவிய⋆ மறைகளும் அடியவர்⋆
விதிவகை பரவுவர்⋆ மிக உளம் எழவே (8)

‡அறிவிலர் தலைமிசை⋆ அயன் அடி எழுதிய⋆
பொறி வகை எழுவதோர்⋆ பொறி நலம் உகவலர்⋆
உறுவதும் உடையதும்⋆ இதுவென வருவது⋆
நறு மலர் மகள் பதி⋆ நலம் உறு நினைவே (9)

‡பெருகிய நல நிலை⋆ பெருமையின் மிகு மயல்⋆
உருகிய நிலை மனம்⋆ உயர் முகிழ் எழும் உடல்⋆
சொருகிய விழி திகழ்⋆ சுடர் மதி புகும் இறை⋆
கருகிய உரு திகழ்⋆ கரிகிரி அரியே (10)

‖ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com